சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M. முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

<u>அசல் வழக்கு எண்.43/2018</u>

09.10.2025

பி.வா.சா.1 திரு. ரவிச்சந்திரன், த/பெ. சீனிவாசன்

<u>வாதி தரப்பு மறு குறுக்கு விசாரணை</u>

நான் பஞ்சாயத்து யூனியனில் வேலை பார்த்து ஓய்வு பெற்றுவிட்டேன் என்றால் சரிதான். எனது தகப்பனார் சீனிவாசன் 07.03.2016 ல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். வாதிகளுடன் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வரை பேச்சுவார்த்தையில் தான் இருந்தேன் வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டு பேச்சுவார்த்தையில்லை. பேச்சுவார்த்தையில் இருந்த போது வாதிகளிடம் தாவா உயில் பற்றி சொல்லியுள்ளேனா எனறால் இல்லை. 2018 ஆம் வருடம் தான் எனக்கு உயில் இருந்த விவரமே தெரியும். உயில் எழுதிவைத்த விவரம் எனக்கு எந்த தேதியில் தெரியும் என்றால் சரியாக ஞாபகமில்லை. வாதிகள் தரப்பில் 12.10.2017 அன்று தாவா சொத்துக்களை பொறுத்து பாகம் கேட்டு அறிவிப்பு அனுப்பினார்கள் என்றால் எனக்கு தெரியாது. வாதி அறிவிப்புகொடுத்தார் என்றாலும் நான் 25.10.2017 அன்று பதில் அறிவிப்பு கொடுத்துள்ளேன் என்றாலும் சரிதான். வழக்கிற்கு பின்னிட்டு வாதி 20.11.2017 ல் இரண்டாவது அறிவிப்பு கொடுத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. அப்போது எனக்கு இருதய அறுவை சிகிச்சை செய்யப்பட்டிருந்தது. நான் கொடுத்த பதில் அறிவிப்பில் தாவா உயில் பற்றி சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். உயில் பற்றி நான் சொன்னதால் வாதிகள் உயிலின் நகல் கேட்டு இரண்டாவது அறிவிப்பு கொடுக்கப்பட்டதா என்றால் எனது வழக்கறிஞர் மூலம் வாதிகளின் வழக்கறிஞருக்கு நகல் கொடுத்துள்ளோம். நான் சொல்வது போல் வாதிகளுக்கு வழக்கறிஞர் மூலம் நகல் எதுவும் கொடுக்கவில்லை என்றாலும் தற்போது வழக்கிற்காக பொய்சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. எனது தகப்பனாருக்கு எழுதப்படிக்க தெரியும், அவர் 10 ஆம் வகுப்பு வரை படித்துள்ளார். பி.வா.சா.ஆ 7 உயில் ஆவணத்திற்கு முத்திரை தாள் வாங்கப்பட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியாது. உயிலில் உள்ள ஷரத்துக்கள் யார் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டது என்ற விவரமும் எனக்கு தெரியாது. உயிலில் கையொப்பம் போட்டுள்ள வழக்கறிஞரின் முகவரி இல்லை என்றாலும் பெயர் மட்டுமே

குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் சரிதான். எனது தந்தை இறந்த பிறகு பி.வா.சா.ஆ.7 உயில் ஆவணத்தை சட்டப்பூர்வமாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. நான் பஞ்சாயத்து யூனியனில் வேலை பார்த்ததால் பட்டா, சிட்டா ஆவணங்களை தயார் செய்துள்ளேன் என்றால் இல்லை. பி.வா.சா.ஆ.7 உயில் ஆவணம் செல்லத்தக்கது அல்ல என்றாலும் அது போலியாக தயார் செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல. இந்த நீதிமன்ற உத்தரவை மீறியதற்காக ஒரு மாதக்காலம் சிறைதண்டனை விதிக்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றிய விவரம் தெரியவில்லை. சிறைதண்டனைக்கு பிறப்பித்த உத்தரவை எதிர்த்து மேல்முறையீடு செய்துள்ளேனா என்றால் இல்லை. வாதிகள் வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டு வங்கியில் கடன் வாங்கி உயிலின் மதிப்பை கூட்டுவதற்காகவும், வங்கி மூலமாக உயிலை குறியீடு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. உயிலில் சான்றொப்பம் செய்துள்ள வழக்கறிஞரை எனது தரப்பில் சாட்சியாக விசாரிக்கலாமா என்றால் விசாரிக்க தயாராக உள்ளேன்.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.